# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 27வது கூட்டறிக்கை 2020.05.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 27வது அமர்வு 2020.05.12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 27வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/27/01**

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

கூட்டறிக்கை சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற கூட்டத்தின் தொடராக நாம் இன்று வித்தியாசமான சூழலுக்கு முகம்கொடுக்கின்றோம். அரசாங்கம் நாட்டின் நிலமையை சீர்படுத்த வேண்டும், அன்றாட தொழிலாளர்கள் தொழிலுக்கு சென்று பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும், அரச உத்தியோகத்தர்கள் வேலைக்கு செல்ல வேண்டும், வாழ்க்கை இயலுமான அளவுக்கு வழமைக்கு மாற வேண்டும் என்ற முயற்சி எடுக்கும் வேளையில் Covid 19 தொற்று முழுதாக அழிக்கப்பட்டிருக்கின்ற என்ற உத்தரவாதம் ஒருவருக்கும் தரமுடியாத நிலையில் இருக்கின்றது. பொதுச் சுகாதாரத்திற்கு பொறுப்பாக இருக்கும் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் பாரிய சவால்களை முன்நோக்குகின்றோம். உதாரணமாக சென்ற சனிக்கிழமை எமது ஹிஜ்ரா பொதுச் சந்தை திறப்பதா? இல்லையா? என்ற ஒரு கலந்துரையாடல் எமது சுகாதார உத்தியோகத்தர்களோடு ஒரு கள விஜயம் மேற்கொண்டு பேசப்பட்ட போது அதற்கு இக் காலம் உகந்ததல்ல. இன்னும் ஒரு கிழமை இதனை அவதானிக்க வேண்டும். ஏனென்றால் நாளாந்தம் நாட்டில் இந் நோயினால் பீடிக்கப்படுபவர்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றார்கள். எனவே நாம் இதில் கவனமாக இருக்க வேண்டும். இக் காலப்பகுதியில் வெளியூர்களில் இருந்தும் எமது ஊரவர்கள் வீட்டுக்கு வந்திருக்கின்றார்கள், வெளிநாட்டில் இருந்தும் வந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தனிமைப்படுத்தல் காலத்தை பூர்த்தி செய்திருந்தாலும், மீண்டும் இங்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும், அவ்வாறு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டும் இருக்கின்றார்கள்.

முக்கியமாக ஜவுளிக் கடைகளை திறப்பது தொடர்பாக பெரிய ஒரு அச்சம் இன்றும் நிலவிக் கொண்டிருக்கின்றது. இதற்கு பொறுப்பான முடிவை எடுக்க வேண்டிய RDHS அவர்களிடம் கதைத்த போது ஒருபுறத்தில் பொருளாதாரம் மீள கட்டியெழுப்ப வேண்டும் என்றால் வியாபாரம் நடக்க வேண்டும். மறுபுறத்தில் இவ் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதில் இருக்கும் பிரச்சினை. எமது ஊர் பெண்கள் கடைகளுக்கு அவர்கள் மட்டும் செல்லாமல் குழந்தைகளையும் எடுத்துக் கொண்டு செல்வதில் பாரிய அபாயம் இருக்கின்றது. ஆனால் நாம் சில விதி முறைகளை விதித்து அதற்கு கட்டுப்படாவிட்டால் நாம் இக் கடைகளை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்ற முடிவின் கீழ் இன்று இரண்டாவது நாள் ஆகும். நாளை ஒரு முடிவை எடுப்பார்கள். இச் சட்டங்களுக்கு அடிபணிந்து செயற்படாத நிறுவனங்களை மூடுவதற்கு ஆகும். ஏனென்றால் அரசு திறந்து இருக்க வேண்டும் என்று கூறும் போது, நாம் மூடுவதற்கு முயற்சி எடுக்க முடியாது. தேசிய மட்டத்தில் எடுக்கும் தீர்வுகளுக்கு மாற்றமாக பிராந்திய மட்டத்தில் செயற்படக் கூடாது. அதனால் இரண்டு நாட்கள் விட்டு நாளை சில கடைகளை மூடுவதா? அல்லது இக் கட்டுப்பாட்டோடு பயணிப்பதா? என்று ஒரு முடிவை எடுப்பார்கள். இதனை பல பெண் உறுப்பினர்களும் என்னிடம் இதன் ஆபத்தை பற்றி பேசினார்கள். ஆனால் இம் முடிவுக்கு நாம் ஒரு முடிவு எடுக்க முடியாது. இம் முடிவு சுகாதார பகுதியினால் எடுக்க வேண்டிய முடிவு ஆகும். நாம் அக்கட்டுப்பாடுகளை மீறாமல் வியாபாரிகள் வியாபாரத்தை செய்ய வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உங்கள் எல்லோருக்கும் தெரியும் இந்த இரண்டு மாதத்தின் தாக்கம் எமது நடவடிக்கைகளுக்கு ஒரு பாரிய சவாலாக மாறும். உதாரணமாக சென்ற ஜனவரி மாதத்தின் வருமானம் 3.5 மில்லியன், பெப்ரவரி மாதத்தின் வருமானம் 15.2 மில்லியன், மார்ச் மாதத்தின் வருமானம் 6.6 மில்லியன், ஏப்ரல் மாதத்தின் வருமானம் 5 இலட்சம் ஆகும். இது மே மாதத்திலும் தொடரும் என்ற அச்சம் இருக்கின்றது. ஏப்ரல் மாதத்தின் 5 இலட்சத்தில் 2 ½ இலட்சம் எமது வைப்புப் பணத்தில் இருந்து வந்த வருமானம் ஆகும். இத் தாக்கம் சம்மாந்துறை சபையை விட ஏனைய சபைகளுக்கு பெரிய ஒரு தாக்கமாக இருக்கின்றது. நாம் ஒரு வகையில் நிதி முகாமைத்துவத்தை இறுக்கமாக கடைப்பிடிப்பதனால் இறைவன் அருளால் இன்னுமொரு 06 மாதம் வருமானம் இல்லாவிட்டாலும் செல்லக் கூடிய ஒரு நிலை இருக்கின்றது. இதற்கு உங்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பு வேண்டும். நிதி முகாமைத்துவம் என்பது எல்லோரும் விரும்புவதை செய்வதல்ல. எது சரியோ, தூர நோக்கோடு இச் சபையை ஒரு நிதிப் பிரச்சினைக்கு உள்ளாக்காமல் நமது ஊழியர்களின் நலனையும் கருதி, நாம் செய்ய வேண்டிய சேவைகளில் சுகாதாரம் மிக முக்கியமானது அதனை எந்தளவிலும் குறைக்க முடியாது. அப்படியான ஒரு சூழலில் நீங்களும் அதை விளங்கி ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உங்கள் எல்லோரினது கைகளிலும் ஒரு சிறு கைநூல் தரப்பட்டிருக்கின்றது. சென்ற கிழமை ஒரு சிறிய கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அதனை பெரிதுபடுத்தாமல் முக்கியமாக கௌரவ அங்கத்தவர்களின் பொறுப்புகள், கௌரவ அங்கத்தவர்களின் கடமைகள், கௌரவ அங்கத்தவர்களின் நடத்தையில் இருக்க வேண்டிய விடயங்கள் அதில் கூறப்பட்டிருக்கின்றது. நீங்கள் எல்லோரும் என்னைப் பொருத்தமட்டில் எனக்கு அதிகாரம் தருபவர்கள். எனக்கும் இச் சபைக்கும் கௌரவம் வருவது உங்கள் நடத்தையினால் ஆகும். எனக்கு அகௌரவம் வருவது

என்றாலும் உங்கள் நடத்தையினால் ஆகும். அதனால் பிரதேச சபை சட்டத்தை பொருத்தமட்டில் விளக்கங்கள் எப்படியாக இருந்தாலும் சட்டத்தில் தெளிவாக கூறப்பட்ட விடயங்களைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். ‘‘பிரதேச சபையின் அதிகாரம் சபை அங்கத்தவர்களின் முடிவுகளினால் பிரதேச சபை தவிசாளரிடம் முழுமையாக கொடுக்கப்படுகின்றது. அந்த அதிகாரத்தை பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ பிரதித் தவிசாளருக்கோ, செயலாளருக்கோ அல்லது வேறு ஏதாவது ஊழியருக்கோ மட்டும் வழங்கலாமே தவிர, கௌரவ உறுப்பினர்களுக்கு அந்த அதிகாரத்தை பகிர முடியாது என்பது இச் சட்டத்தின் விளக்கம் ஆகும்’’. இதில் வெவ்வேறு வல்லுனர்கள் அதை விளங்கப்படுத்தும் போது சில சொற்பிரயோகங்களினால் சில பிரச்சினைகள் வருகின்றது. நாம் எடுக்கும் முடிவை அம் முடிவின் அம்சமாக இருக்கும் ஒருவர் மேற்பார்வை செய்ய முடியாது, ஆனால் தலையிடலாம்.

நீங்கள் எல்லோரும் சேர்ந்து எடுக்கும் முடிவை சரியாக செயற்படுகின்றதா? என்று உங்களின் நிலையில் இருந்து ஒரு கௌரவ உறுப்பினராக சபையின் செயலாளர், சபையின் தவிசாளர் அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் அல்லது இன்னுமொரு நிறுவனத்தின் தலைவரோடு அதனை கலந்து ஆலோசிப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் அதை பகிரங்கப்படுத்தப்படும் போது கவனமாக சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்படாவிட்டால் அதில் சில பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இதனை தவிர்த்துக் கொண்டு உங்களுக்கு அதில் குழப்பங்கள் இருக்குமானால் நிச்சயமாக என்னிடம் கேட்டு அதில் தெளிவு காணலாம். இல்லாவிடில் செயலாளரிடம் கேட்கலாம். அதுவும் உங்களுக்கு தெளிவு இல்லாவிட்டால் எமது பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரிடம் கூட நீங்கள் தெளிவு காணலாம். இந்த சபையின் முழு அதிகாரமும் இந்த சபையில்தான் உண்டு. இச் சபையின் அங்கீகாரம் இல்லாமல் எந்த விடயத்தையும் தவிசாளர் செய்ய முடியாது. எதை செய்தாலும் மீண்டும் சபைக்கு வந்து அவ் அங்கீகாரத்தை பெற வேண்டும். அப்படியான சூழலில் நீங்கள் இவைகளை எதிர்காலத்தில் கவனமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

சென்ற மாதத்தின் செலவீனங்களை சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது தெளிவுகாண வேண்டும் என்றால் அதனை கேட்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது நிர்வாகத்தின் கீழ் 13வது அலுவலக பாவனைக்குரிய பொருட்கள் (Consumables Goods) கொள்வனவு, 14வது அலுவலக பாவனைக்குரிய பொருட்கள் (Electrical Items) கொள்வனவு என்று ஏன் போடுபட்டுள்ளது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Consumables Goods என்றால் அலுவலகத்திற்கு தேவையான 06 மாதத்திற்குரிய Stationery போன்ற அழி பொருட்கள் ஆகும். Electrical Items சென்ற வருடம் ஒரு தீர்மானம் எடுத்து இந்த வருடத்திற்கு Registered Suppliers மூலம் எடுக்கப்படுகின்றது. இதற்குரிய தகவல்களை செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தீர்மானம் - 04/27/02**
சென்ற மாதம் 2020.04.01 தொடக்கம் 2020.04.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கொரோனா வைரஸ் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு சட்டம் காரணமாக வருமானம் இழந்துள்ள வருடாந்த குத்தகைக்கு பெற்றுள்ள கடைகளின் மாதாந்த குத்தகை அறவீடு தொடர்பாக, மார்ச் மாதம் 09 நாளும், ஏப்ரல் மாதம் 17 நாளும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நாம் முன்மொழிவது என்றால் தொகையை தீர்மானித்து சபை தீர்மானம் எடுத்து ஆளுனருக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் Tender படி

கணக்குப் பார்த்தால் ஏறத்தாள இரண்டு மாதங்களுக்கும் 1.6 மில்லியன். ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதனால் சந்தைக் கடைகளை திறப்பதற்கு கொடுக்கவில்லை. திறந்த வெளிச் சந்தை முழுமையாக இருக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போது கூட Mobile Business மூலம் செல்வதனால் அதற்கு அறவீடுகள் அறவிடப்பட்டிருக்கின்றது. சென்ற முறையும் 2019 ஏப்ரல் குண்டு வெடிப்பு காலத்திலும் இவ்வாறு செய்திருக்கின்றோம். இதில் உங்களின் கருத்துக்கள் ஏதாவது இருந்தால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட ஒரு அனர்த்தம் என்றுதான் கூறவேண்டும். பல்வேறுபட்ட நிறுவனங்கள் தங்களால் முடியுமான உதவிகளை மக்களுக்கு செய்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் உண்மையாக பொதுச் சந்தை குத்தகை எடுத்தவர்கள் அல்லது ஏலம் எடுத்தவர்கள் எமது ஊரை சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். எவ்வாறாயினும் இதற்கான முற்பணத்தையும் செலுத்தியிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். ஏதோ ஒரு வகையில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கின்றது. நாங்கள் ஊரடங்கு சட்டம் இல்லாத நாட்கள் என்று சொன்னாலும் வழமை போன்று அவ் வியாபார நடவடிக்கைகள் நடைபெற்ற சந்தர்ப்பம் குறைவு. எனவே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாட்களை கணக்கெடுக்காமல் பொதுவாக இவர்களுக்கு என்ன செய்யலாம் என்ற தீர்மானத்தை எடுத்து அவர்களுடைய பொருளாதாரத்திலும் தாக்கம் ஏற்படாத வகையில் சபைக்கும் தாக்கம் எற்படாத வகையில் செய்ய வேண்டும். ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட நாட்களில் மிகக் கூடுதலான கட்டணங்களும் அறவிடப்பட்ட சில சந்தர்ப்பங்களும் இருக்கின்றது. எனவே சபைக்கு எந்த பங்கமும் இல்லாமல், உரியவருக்கும் பங்கம் இல்லாமல் நடப்பதற்கு சகல கௌரவ உறுப்பினர்களும் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இது எனது கருத்து எதிர்ப்பு அல்ல.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மார்ச், ஏப்ரல் வருமானத்தில் 1.6 மில்லியன் வருமானம் இல்லை. இதற்குள் நாம் கூட்டுவதா? குறைப்பதா? என்ற ஒரு அடிப்படை இருக்க வேண்டும். சில நேரங்களில் சாதாரண நாட்களை விட ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட நாட்களில் அவரின் வருமானம் கூடுதலாக இருந்திருக்கலாம். ஆனால் அதனை கணக்கிடுவதற்கு வழி இல்லை. அதனால் அவரின் நாள் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக ஆளுனருக்கு அறிவித்து அவர்களின் முடிவுக்கு ஏற்ற மாதிரி நடவடிக்கை எடுக்கலாம். நாம் முடிவு எடுக்க இயலாது. கழிவு ஆளுனர்தான் கொடுக்கலாம். அமைச்சர் இல்லாத படியினால் இன்று அமைச்சுப் பொறுப்பை கண்காணிக்கும் பொறுப்பு ஆளுனரிடம்தான் இருக்கின்றது. எனவே இதனை அறிவித்து ஒரு முடிவு எடுப்போம்.

## தீர்மானம் - 04/27/03

நாட்டில் ஏற்பட்டுள்ள ‘‘கொரோனா வைரஸ்’’ காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு சட்டம் காரணமாக வருமானம் இழந்துள்ள வருடாந்த குத்தகைக்குப் பெற்றுள்ள திறந்த வெளி சந்தை, மாட்டிறைச்சிக் கடைகள், சந்தைக் கடைகள் போன்றவற்றின் மாதாந்த குத்தகை அறவீடு (2020.03.20 தொடக்கம்) தொடர்பான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

மூடப்பட்டிருந்த நாட்களைக் கணித்து, அதற்கமைய ஒரு நாளுக்குரிய கழிக்கும் தொகையினை கணிப்பீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/04

‘‘கொரோனா வைரஸ்’’ பரவலைத் தடுப்பதற்காக பிரதான அலுவலகம், அமீர் அலி பொது நூலகம், முகைடீன் பொது நூலகம், விலங்கு அறுமனை, ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி என்பவற்றுக்கு வருகை தரும் பொது மக்கள், அலுவலகர்களின் உடல் வெப்பநிலையினை பரிசோதிப்பதற்காக 05 Infrared Thermometer கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
விழா முற்பணம் பெற தகுதியானவர்கள் தற்காலிக ஊழியர்கள் மாத்திரம் ஆகும். நிரந்தர ஊழியர்களுக்கு முற்பணம் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு கூட கொடுக்கவில்லை. அதனால் நோன்புப் பெருநாளைக்கு என்று செய்ய இயலாது. அரசாங்கம் கொடுக்க வேண்டாம் என்று கூறியிருக்கின்றார்கள். நிரந்தர ஊழியர்கள் ரூபா 5000.00 முற்பணமாக தந்து 10 மாதத்திற்கு அறவீடு செய்யுமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நான் செயலாளரை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்கச் சொன்னேன். அவரின் அறிவுரை என்னவென்றால் அரசாங்க கட்டளை கொடுக்க முடியாது ஆனால் முற்பணமாக அவர்களுக்கு ரூபா 5000.00 கொடுத்து, அவர்களின் அம் மாத சம்பளத்தில் கழிக்க வேண்டும் என்று கூறினார்.

### தீர்மானம் - 04/27/05
நோன்புப் பெருநாள் பண்டிகை விழா முற்பணம் பெறத் தகுதியான ஊழியர்களுக்கு விழா முற்பணம் வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/27/06
சேதனப் பயளைக்குரிய கேள்வி அதிகரிப்பதால், காத்தான்குடி நகர சபையிடமிருந்து ஏற்றுக் கூலியுடன் 01Kg சேதனப் பயளையினை ரூபா 7.00 இற்குப் பெற்று, அதனை எமது சபை மூலம் ரூபா 10.00 இற்கு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/27/07
கலிசகர் இயந்திரத்தின் Pump பழுதடைந்துள்ளதனால் அதனை உற்பத்தியாளரிடம் அனுப்பி திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சேதனப் பயளை தொடர்பாக, சேதனப் பயளையின் தரத்தை குறிப்பிட்ட காலத்தில் கொள்வனவு செய்பவர்கள் மீண்டும் அதனை பெற்று வருமானம் பெற வேண்டுமானால் அது தரமானதாக இருக்க வேண்டும். அதற்கு கழிவாக வந்தடையும் ஆற்று நீர்வாழையை சேர்த்து உள்வாங்கினால் அதில் நைதரசன் கூடுதலாக இருக்கும். இதனை உள்வாங்கி செய்தால் மிகவும் வேகமாக மக்கள் பயனையும் பெறுவார்கள். அதை பாவிக்கின்ற போது மண்ணின் வளமும் மாற்றமடையும். உதாரணமாக ஒரு மணல் மண்ணை தொடர்ந்து பாவித்து வந்தால் சேற்று மண்ணின் நிலைக்கு மாற்றமடையும். அசேதன வளமாக்கிகளை விட சேதன வளமாக்கிகளை பாவிப்பதற்கு மக்கள் பழகுவார்கள். அரசாங்கமே தற்போது கூறிக்கொண்டிருக்கின்றது என்னவென்றால் வீட்டுத் தோட்டங்களை செய்வதும், தரிசாக கிடக்கின்ற

நிலங்களை உள்வாங்குவதும் ஆகும். அதில் எமக்கு தேவையானதை உற்பத்தி செய்ய வேண்டும். உதாரணமாக என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் ஒழுங்காய் பாடுபடு வயல்காட்டில் என்ற சொல் மாதிரி தற்போது எமக்கு கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பம் கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் தற்போது நாம் 10 ஏக்கருக்கு மேற்பட்ட ஒரு பரப்பை உழவி இருக்கின்றோம். இன்னும் தரிசாக கிடக்கின்றதை GA இன் உடன்படிக்கையில் கேட்டிருக்கின்றோம். இதனை உடனடியாக உள்வாங்கி விவசாயம் எமது ஒரு பகுதி ஆராய்ச்சிற்குரிய இடம் இருக்கின்றது. சம்மாந்துறையில் ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அதற்கு வளமான கிட்டத்தட்ட 20 ஏக்கர் காணியையும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எமது விளையாட்டு கட்டிடத் தொகுதி ஒரு தவளை கிடந்து பாழடைந்து இருந்ததை நாம் கையேற்று ஒரு முன்மாதிரியாக நல்ல முறையில் நடைமுறைப்படுத்தி வருவது போல் இங்கு தரிசாக இருக்கின்ற நிலத்தை நாம் வளப்படுத்த வேண்டும். இது பொதுமக்களின் பணம் ஆகும். மக்களின் பணத்தில் செய்வதில் இலாபம் பெறாவிட்டால் நாம் பொதுமக்களுக்கும் பதில் சொல்ல வேண்டும். இறைவனுக்கும் பதில் சொல்ல வேண்டும். இது ஒரு கஸ்டமான பணி ஆகும். இப் பணியை நாம் தனியே செய்யாமல் இதில் ஒருவரை Contract அடிப்படையிலோ அல்லது விவசாயத்தை பற்றிய AI அல்லது அது சார்ந்த ஒருவரை இவ் இடத்தில் என்ன பயிர் செய்யலாம் ஏனென்றால் சில இடங்களில் நீர் தேங்கி நிற்கும், சில இடங்களில் மேடாக இருக்கும். சம்மாந்துறை APC இல் கச்சான் வந்திருக்கின்றது. எலிகள் இல்லாத இடத்தில் கச்சான் பயிரிடலாம். இப்படியான ஒவ்வொரு இடத்திற்கும் பொருத்தமான பயிரை இடவேண்டும். அவற்றை பாதுகாக்க வேண்டும், அதில் இருந்து இலாபம் அடைய வேண்டும்.

இத்திட்டத்தில் எமது எல்லா சபை அங்கத்தவர்களும் தனிப்பட்ட முறையிலோ, பொதுவான முறையிலோ சென்று அவ் இடத்தை பார்த்து என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் ஒற்றுமையாக செய்ய வேண்டும். எமக்குள் ஒற்றுமை வந்தால் எதையும் நாம் தாங்கலாம். ஆனால் நாம் வேற்றுமையாக நினைத்தால் இதனை முன்கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படும். எனவே கௌரவ உறுப்பினர்கள் உங்களது ஆலோசனைகளையும் வழங்கி இது தொடர்பாக கலந்தாலோசித்து இதை நாம் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்று மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சௌபாக்கியா திட்டத்தின் கீழ் நாம் பங்களிக்க வேண்டும் என்று சென்ற அமர்வில் நாம் ஒரு தீர்மானம் எடுத்து அச் செயற்திட்டம் முழுமையாக செயற்படுவதற்கு இன்று தாமதமாக இருப்பதற்கு காரணம், ஒன்று அரசாங்கத்தினால் தரும் விதைகள் இன்னும் வந்து சேரவில்லை. அடுத்தது உத்தியோகபூர்வமாக காணியின் அதிகாரம் DS தந்திருந்தாலும் GA இடம் இருந்தும் எழுத்து மூலம் வர வேண்டும். அது இன்று அல்லது நாளை கிடைக்க வேண்டும். உண்மையாக இது முன்மாதிரியான முயற்சி. பிரதேச சபை, பிரதேச செயலகம், விவசாய திணைக்களம் போன்ற 03 திணைக்களமும் சேர்ந்து தற்போது இருப்பது திட்டமிடல் Stage இல். ஆரம்பத்தில் இத் திட்டத்தை முழுமையாக எமது உப தவிசாளரிடம் நடைமுறைப்படுத்துவதற்கு பாரம் கொடுத்திருக்கின்றேன். விதைகள் வந்தவுடன் கோலாகலமாக எல்லா கௌரவ உறுப்பினர்கள், பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், விவசாய திணைக்களம், GA, மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோரையும் சேர்த்து நாட்டுக்கு செய்தியை கொண்டு போகக் கூடிய நிகழ்வாக நடத்துவதற்கு அம் முழு பொறுப்பையும் உதவித் தவிசாளரிடம் கையளித்திருக்கின்றேன். அதற்கு கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் இதில் அக்கரை கொள்கின்றவர்கள். சபை எது செய்தாலும் அது எல்லோருக்கும் பொறுப்பானது. இந்த அசாதாரண சூழ்நிலையில் இன்னும் அடிப்படை வேலைதான் செய்திருக்கின்றோம். கௌரவ உப தவிசாளர் ஏனைய அங்கத்தவர்களையும் உள்வாங்கி செயற்குழுவை உருவாக்கி ஒரு திட்டத்தை வகுத்து என்னைப் பொருத்தமட்டில் இதில் இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்தை விட மாற்றுப் பயிர்ச் செய்கை இவ் ஊரில் வெற்றிபெறாத நிலையில்தான் இருக்கின்றது. இப் போகம் முடிந்ததும் புளக் ஜே வட்டைப் பகுதியில் 6000 ஏக்கருக்கு மாற்றுப் பயிர் செய்வது என்று ஆரம்ப கூட்டத்தில் முடிவு ஒன்று எடுத்தோம். அதற்கு முன்னோடிதான் இதுவாகும். நீங்கள் எல்லோரும் இதற்கு பங்காளிகளாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாற்றுப் பயிர்ச் செய்கை செய்கின்ற கருதிட்டத்தில் தலையிடுவதற்கு மன்னிக்க வேண்டும். இவ் விடயத்தில் மறைந்து கிடக்கின்ற காணிகளை GA

வரைக்கும் காட்டுகின்றோம். அரச காணிகள் இவ்வளவு இருக்கு இந்த இடத்தில் இருக்கு என்று காணிகளை எடுத்துக் காட்டுகின்றோம். உதாரணமாக முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் கைத்தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்கின்ற போது விவாதிக்கப்பட்ட விடயம்தான் இக் காணியில் வெளியில் இடம் இருக்கு என்று தொட்டுக்காட்டுகின்றோம். புளக் ஜே இல் 6000 ஏக்கரில் 60 ஏக்கர் செய்தாலும் கேள்விப்படப்போவதில்லை. அரச காணிகள் இருக்கின்ற விடயம் மேல்மட்டங்களை தொட்டுக்காட்டுகின்ற போது அடுத்த கட்டத்தில் உங்களுக்கு கூடுதலான காணிகள் இருக்கின்றது அரச கட்டிடத்தை கட்டுவோம் என்று கூறி அவர்களுக்கு தேவையான கட்டடங்களை இங்கு கட்டுவதற்கு இடம் இருக்கின்றது. இக் கருத்தை உள்வாங்க வேண்டும். உதாரணமாக நாம் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இருந்த Sports Complex ஐ கடந்த சபையில் ஊர் பெரும் சபைகளும் கூடி விட்டுக் கொடுக்க இயலாது அது எமது சபையின் கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும் என்று கூறினோம். தற்போது இப் பலனை 100% இந்த ஊர் அனுபவித்து வருகின்றது. இதே போன்றுதான் ஊரின் எல்லைக்குள் இருக்கின்ற அரச காணிகள் என்கின்ற விடயம் இவ் ஊர் மக்களுடைய காணியாக காணப்படுகின்றதே தவிர வேறு கட்டிடங்கள், வேறு வேலை திட்டங்களுக்கு அரச சபைகளால் அல்லது அரசாங்க அதிகாரிகளால் கொண்டு வரப்படுகின்ற போது நாம் இவ் ஊருக்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

பயிர்ச் செய்கை விடயங்களை கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறும் வரைக்கும் எனக்கு தெரியாது. ஏனைய கௌரவ உறுப்பினர்களுக்கு தெரியுமா என்பது எனக்கு தெரியாது. கௌரவ உப தவிசாளர் அவர்கள் பயிர்ச்செய்கை திட்டத்தில் கச்சான், சோளம் பயிரிடுவது பிரதேச செயலகத்தில் கலந்து கொள்வது தொடர்பாக கௌரவ தவிசாளர் அவர்கள் இச் சபையில் கூறிக்கொண்டார். கடந்த சபையிலும், அதற்கு முதல் சபைகளிலும் கூறியிருக்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே, மீண்டும் கூறிக்கொள்கின்றேன் இங்கு இருக்கின்ற உறுப்பினர்களும் இவ் விடயங்களில் ஆர்வம் உள்ளவர்கள் இருப்பார்கள் அவர்களின் அக்கரைக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை மீண்டும் கூறியவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற அமர்வில் இவ் முடிவு எடுக்கும் போது நான் இவ் விடயத்தை தெளிவுபடுத்தி அப் பிண்ணனியில்தான் அம் முடிவு எடுக்கப்பட்டது. இதில் இவ் ஊர் பொதுச் சொத்து என்ற விடயத்தில் நீங்களோ அதை சுட்டிக்காட்டினீர்கள் மாகாண சபை ஆட்சிக்கு கீழ் இருந்ததை நாம் சென்ற சபையில் எப்படி போராடி நமது கைக்குள் வைத்திருப்பது போல் ஆலையடி வட்டையில் இருக்கும் அரச காணிகள் நாம் சபையில் இல்லாத போது ஒரு சர்ச்சையாக மாறி மீண்டும், இச் சபை நம்பிக்கையாளர் சபையோடு சேர்ந்து அக் காணிப்பகுதியை சம்மாந்துறை பிரதேச சபையின் திண்மக் கழிவு ஒரு காலத்தில் சனத்தொகை கூடிக்கொண்டு போகும் போது Centralised Sewage Plant அமைப்பதற்கு அதை விட பொருத்தமான இடம் இல்லை. சுற்றி இருப்பது விவசாயக் காணிகள். இவ் ஊரின் எல்லைகள் பெரும்பான்மை சமூகம் வாழும் பகுதிகள் அதனால் அப்படி ஒரு சுத்திகரிப்பு நிலையம் செய்வது என்றால் அங்கு சாதகமாகாது. அக் காணி இருக்கும் 18 ஏக்கர் காணி இதற்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று முற்சபைகளின் தீர்மானமாகவும் அரசாங்க அதிபர் மட்டத்தில் கொண்டு சென்று பிரதேச செயலகத்தை பொருத்தமட்டில் இக் காணி அரச தேவைக்கு தவிர வேறு எந்த தேவைக்கும் பாவிக்கப்படாது. மத்திய அரசுக்கு சொந்தமான சொத்துக்களை பிரதேச சபையின் சொத்துக்களாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொரு திட்டத்திலும் நாம் பங்காளிகளாக மாறினால்தான் அதனை நமக்குள் கொண்டு வரலாம். இச் சபை 2011 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் சபை. நாம் ஒவ்வொரு பொது விடயத்திலும் தூரநோக்கோடுதான் செயற்பட்டிருக்கின்றோம்.

இச் சூழலில் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் சுகாதார ஊழியர்கள் நாளாந்தம் வேலை செய்கின்ற போது கூட அவ் வேலையை பாராட்டாமல் குப்பைகளை எடுக்கவில்லை என்று முறைப்பாடு வருகின்றது. அவர்கள் அதை பிரிக்காததனால் குப்பைகளை எடுக்கவில்லை. உண்மையாக மக்கள் விளங்கவில்லை, எவ்வளவு அர்ப்பணிப்போடு சுகாதார ஊழியர்கள் நாளாந்த வேலை செய்கின்றார்கள் என்று. அவர்களை பாதுகாப்பது எமது கடமை. எனவே அவர்களுக்கு பாதுகாப்பான உடை வழங்க வேண்டும்.

## தீர்மானம் - 04/27/08

சுகாதார ஊழியர்களுக்கான மற்றும் வேலைத் தொழிலாளிகளுக்கான பாதுகாப்பு உடை கொள்வனவு செய்து வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திண்மக் கழிவு அகற்றலில் எமது உக்குகின்ற கழிவுகளில் பாரிய ஒரு பிரச்சினை எமது ஊருக்கு வருகின்றது. அதாவது முருங்கை மரம், வாழை மரம், ஓலை இவைகள்தான் கூடுதலாக வீட்டுத் தோட்ட கழிவுகளாக வருகின்றது. இவைகளை எடுத்து எம்மிடம் இருக்கும் இயந்திரம் மூலம் அரைத்து எடுக்க இயலாது. எனவே Hayleys நிறுவனம் மூலம் Shredder/Pulveriser இயந்திரத்தை Compost Yard இற்கு எடுத்தால் வாழை மரம் எல்லாம் சேதனப் பசளையாக மாற்றலாம்.

## தீர்மானம் - 04/27/09
திண்மக் கழிவகற்றல் நிலையத்தில் சேதனப் பயளை தயாரிக்கும் அளவினை உயர்த்துவதற்காக Hayleys நிறுவனத்தில் இருந்து Shredder Pulveriser இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/10
சேதனப் பயளை தயாரிக்கும் நிலையத்தில் தற்போது பாவிக்கப்படும் Shredder இயந்திரத்தின் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக அதற்கு Conveyor Belt கொள்வனவு செய்து பொருத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/11
சபைக் கட்டடத்திற்கு உட்பிரவேசிப்பவர்களை தொற்று நீக்கம் செய்வதற்காக தேவைப்படின் Desanitising Chamber ஒன்றை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/12
தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வருமானப் பரிசோதகர் என்பவர்களுக்கு திறைசேரிச் சுற்று நிருபம் PT/01/2020 இற்கமைய போக்குவரத்து கொடுப்பனவும், மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் 7/1/2000 இற்கமைய விடுமுறை நாட்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/13

திருமதி.Y.B.கதீஜா உம்மா அவர்களுக்கு நிதி உதவியாளராக கடமையாற்றிய காலப்பகுதிக்குரிய நிதி உதவியாளருக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வைத்திய அத்தியட்சகர் எமது பகுதிக்கு தற்போது திடீர் மரணப் பரிசோதகர் இல்லை என தெரிவித்து உள்ளார். இவ் விடயம் பற்றி கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களுக்கு நன்றாக விளங்கும். வைத்திய அத்தியட்சகரின் வேண்டுகோளிற்கு இணங்க இச் சபையில் ஓர் தீர்மானம் எடுத்து, நீதி அமைச்சருக்கு 1979ம் ஆண்டின் குற்றவியல் விசாரணை சட்டத்தின் 108 வது பிரிவின்படி சம்மாந்துறை Magistrate Court எல்லைக்கு, சம்மாந்துறை பொலிஸ் நிலைய எல்லைக்கு ஒரு திடீர் மரணப் பரிசோதகர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அதற்கு தகுதியான ஒருவரை மிக விரைவில் நியமிக்க வேண்டும் எனவும் நாம் அனுப்ப வேண்டும்.

## தீர்மானம் - 04/27/14

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் தற்போது திடீர் மரணப் பரிசோதகர் ஒருவர் இன்மையால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக திடீர் மரணப் பரிசோதகர் ஒருவரை நியமிப்பதற்கு நீதி அமைச்சுக்கு முன்மொழிவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

குறித்த தீர்மானத்தினை நீதி அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறிய விடயத்தைப் பற்றி கூற விரும்புகின்றேன். அதாவது Agriculture பொறுப்பை கௌரவ உப தவிசாளரிடம் வழங்கப்பட்டுள்ளது. நல்ல விடயம் ஆனால் Agriculture விடயங்கள் நாங்கள் ஏற்கனவே சென்று உழவியுள்ளதாக அறிந்திருந்தேன். ஆனால் முதலில் திட்டமிட வேண்டும். இப் பயிர்தான் இக் காலப்பகுதியில் செய்யவேண்டும் இதற்கு ஏற்படுகின்ற செலவீனங்களும் எமக்கு தெரிய வேண்டும். இதில் இலாபம் பெற வேண்டும். ஆனால் நாம் இதற்கு இச் சபையால் உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் Contract அடிப்படையில் ஒருவரை நியமித்தால் நல்லம். ஏனென்றால் எந்தக் காலத்தில் என்ன பயிர்கள் செய்யலாம், அதற்குரிய திட்டங்களையும் இலகுவாக அவர் எமக்கு செய்து தருவார் என்று நினைக்கின்றேன். நாம் விவசாய திணைக்கத்துடன் சேர்ந்து செய்யலாம் ஆனால் அவர்கள் வேறு சுமைகளை எம்மிடம் கூறியிருப்பதால் தாமதங்கள் ஏற்படும். எனவே இது தொடர்பான ஒருவரை நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

எமது கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறிய விடயம், இங்கு இருக்கின்ற சகல உறுப்பினர்களுக்கும் தாகமாகத்தான் இருக்கும். ஏனென்றால் உங்களுக்கு முன் சிலருக்கு கூற முடியாமல் இருக்கலாம். எல்லோருக்கும் எல்லா பொறுப்பும் செய்ய இயலும். அதற்குரிய தகுதியை தந்தால் நிச்சயமாக நாங்களும் களம் இறங்கி செய்வதற்கு தயாராகத்தான் இருக்கின்றோம்.

ஆனால் எங்களுக்கு ஒரு கவலை என்னவென்றால் FB இல் பிரதேச சபையின் விடயங்கள் போடுபட்டது மன்னிக்க வேண்டும் கௌரவ தவிசாளர் அவர்களே, இதை குறிப்பிடுகின்றேன் என்று அதாவது கௌரவ தவிசாளரின் ஆலோசனைக்கு இணங்க என்று FB இல் போடுபட்டுள்ளது. ஆனால் அதில் உறுப்பினர்கள் என்று சேர்க்கப்படவில்லை. நிச்சயமாக பிரதேச சபையின் FB பாவிப்பது என்றால் கௌரவ உறுப்பினர்களையும் உள்வாங்க வேண்டும் என்று என்னுடைய கருத்தை கூற விரும்புகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் அக் கருத்தை உள்வாங்கியவனாக, இது அரச காணி, அரச காணியின் பங்காளியாக பிரதேச செயலகம், இத் திட்டத்தை முன்மொழிந்தவர்கள் பிரதேச சபை, அதில் நிபுணத்துவம் கொண்டவர்கள் விவசாய திணைக்களம். அவர்கள் இந்தக் காணிக்கு இப் பயிர் பொருத்தமானது என்று இனங்கண்டு முன்வைத்ததன் காரணமாகத்தான் திட்டமிட்டுள்ளோம். விவசாய திணைக்களத்தை விட விவசாயத்தைப் பற்றி நாம் வேறு ஒருவரிடமும் கேட்க தேவையில்லை. நான் தனிப்பட்ட முறையில் DS மட்டுமல்லாமல் GA, Deputy Director Agriculture இவர்கள் எல்லோரையும் சேர்த்துதான் இத் திட்டத்தை செயற்படுத்த உள்ளேன். சம்மாந்துறை பிரதேச சபை என்றால் தவிசாளர் மட்டுமல்ல சபைக்கு ஒரு முன்னுதாரணமாக நாம் இதற்கு ஒரு ஊக்குவிப்பாக இம் முயற்சியில் இறங்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை செய்தது. நிச்சயமாக உழவுவது ஒரு ஆரம்ப வேலை. ஈரத்தன்மை இருக்கும் போதுதான் உழவ வேண்டும் அதற்கு பிறகு நீர் இல்லாத நேரத்தில் உழவ இயலாது என்பதற்காகத்தான் செய்தோம். ஒவ்வொரு விடயங்களையும் செய்யும் போது கௌரவ உறுப்பினர்களுக்கு நான் அறிய தரவேண்டும் என்று சொன்னால் அதில் நடைமுறைச் சிக்கல் இருக்கின்றது. நிச்சயமாக நீங்கள் ஆர்வமுள்ளவர்களாக இருப்பீர்களானால் அதை அறிந்து கொள்ளலாம்.

Facebook இல் நான் ஏதாவது சபைக்கு அறிவிக்காமல் சில நடைமுறை வேலைகளை செய்கின்ற போது அவர்கள் இதில் போடலாம். நான் உங்களின் கருத்தை உள்வாங்குகின்றேன். இனிமேல் கௌரவ சபையின் வழிகாட்டலில் நடைபெறுகின்றது என்று போடலாம். ஏனென்றால் எனக்கு Publicity தேவையில்லை. நிச்சயமாக தவிசாளர் என்று கூறும் போது உங்கள் எல்லோரையும் சேரும். இச் சபை இவ்வளவு காலமும் முன்னுதாரணமாக நடந்ததற்குரிய பெருமை உங்கள் எல்லோருக்கும் உரியது. அது எனக்கு மட்டும் என்று நினைப்பீர்களானால் அது தவறு. சம்மாந்துறை பிரதேச சபை எதை செய்தாலும் எல்லோரும் பங்காளிகள். அதை நான் FB மூலமாக சொல்லாவிட்டாலும் எல்லா இடங்களிலும் பெருமையாக நாங்கள் நாட்டுக்கு முன்னுதாரணமாக செயற்படுகின்றோம் என்பதை நான் எத்திவைத்திருக்கின்றேன். நிச்சயமாக அவ் அறிவுறுத்தல்கள் இனிமேல் அந்த குறிப்புகள் தவறாக இருந்தால் அதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சம்மாந்துறை வைத்தியசாலையில் இருந்து 10 இருக்கைகள் கேட்டு கடிதம் அனுப்பி இருந்தார்கள். இதைப்பற்றி தெளிவுபடுத்த வேண்டும் என்னவென்றால் தற்போது 06 வைத்திய விசேட நிபுணர்கள் எமது சம்மாந்துறை வைத்தியசாலையில் இருப்பதால் சிகிச்சை பெற வரும் மக்களின் சனத்தொகை அதிகரித்து விட்டது. தற்போது கொரோனா வைரஸ் காரணமாக இருக்கைகளின் இடைவெளிகள் கூடுதலாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க மக்கள் இருப்பதற்கான இருக்கை இடவசதி வெளியில் போதாமல் உள்ளது. இதன் காரணமாக உடனடியாக இந்த இருக்கைகளை எமது வைத்தியசாலைக்கு பெற்றுக் கொள்வது என்பது ஒரு முடியாத விடயமாக இருக்கின்றது. அதனால்தான் பிரதேச சபை ஊடாக 10 இருக்கைகள் உதவி செய்யலாம் என்று உறுப்பினர் சார்பாக அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் மிகவும் மன வேதனையான விடயம் நான் கட்டாயம் சொல்ல வேண்டும். சகல உறுப்பினர்களையும் பிரதேச சபை உறுப்பினர் என்ற ரீதியில் கட்சி பாகுபாடு இன்றி வழிநடத்திக் கொண்டிருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களிடம் நான் வினயமாக கேட்டுக்கொள்வது என்னவென்றால் ஒருவர் ஒரு சேவையைச் செய்தால் அவருடைய பெயரைக் குறிப்பிட்டு அந்தச் சேவையை செய்வதில் நாம் எந்தத் தடங்களும் இல்லை. ஏனைய உறுப்பினர்கள் சேவை செய்வதை முகநூலில் இடவில்லை என்றும் தான் செய்யும் சேவையை முகநூலில் இடுகிறேன் என்பதையும் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எனது வைத்தியசாலையில் எனது சொந்த விடயம் காரணமாக பேசிக்கொண்டிருக்கும் போது உள்நுழைந்து அவருடைய விடயத்தை பேசிவிட்டு செல்வது என்பது எனக்கு எந்த இடைஞ்சலும் இல்லை. எல்லோரும் அவர் அவர் தேவையை வந்து பெற்றுக்கொள்ளலாம், செய்து கொள்ளலாம். ஆனால் மறைமுகமான புகைப்படத்தை எடுத்து ஒருவரின் அனுமதி இல்லாமல்

எனது அனுமதி இல்லாமல், வைத்திய அத்தியட்சகரின் அனுமதி இல்லாமல், எனது நிர்வாக உத்தியோகத்தரின் அனுமதி இல்லாமல் அதை முகநூலில் காட்டி பகிரங்கப்படுத்துவதை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன். மீண்டும் இந் நிகழ்வு நடக்கக் கூடாது. இதனை முகநூலில் இருந்து எடுக்கவில்லை என்றால் நானும் சட்டநடவடிக்கை எடுப்பேன் என்பதையும் சபையூடாக மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன். மிகவும் தெளிவாக சொல்கின்றேன். ஏனென்றால் எனக்கும் ஒரு அவமானம் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மேற்பார்வை உத்தியோகத்தர் என்பது இச் சபையில் இருக்கின்றதா? இல்லையா? என்பதைப் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆரம்பத்திலே பதில் கூறிவிட்டோம். அதை பிரச்சினையாக்கத் தேவையில்லை. இனிமேல் நடக்காமல் நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

கதிரைகளை பொருத்தமட்டில் பிரதேச சபையால் எடுத்து வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்வதை பரிசீலிக்க வேண்டும். அது ஒரு அரச நிறுவனம் ஆகும். அப்படி என்றால் நாம் பிரதேச சபையின் சொத்தாக காட்ட வேண்டும். நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கினால் சபைத் தீர்மானம் எடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் அனுமதி எடுத்துவிட்டு செய்யலாம். மாற்றாக நாம் இவைகளை சனசமூக நிலையங்கள் மூலமாகவும் பூர்த்தி செய்யலாம்.

## தீர்மானம் - 04/27/15

சம்மாந்துறை வைத்தியசாலைக்கு நோயாளிகள் இருப்பதற்கு தேவையான கொங்கிறீட் ஆசனங்களை எமது சனசமூக நிலையங்கள் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/27/16

அமீர் அலி நூலகத்தின் வாசிப்பு பிரிவில் தரைப்பகுதியை (Tiles பதித்தல்) திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பண்ணைக் காணியில் பயிர்ச்செய்கை செய்வது தொடர்பாக, இதற்கான முதலீட்டை செலுத்துபவர்கள் யார்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதலீடு சபையினால்தான்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உதாரணத்திற்கு 10 ஏக்கர் நிலத்தை பயிர் செய்வதாக முதற் கட்டமாக தீர்மானித்திருக்கின்றோம். உதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் கச்சான் செய்வது என்றால் கச்சானை விதைத்ததில் இருந்து அறுவடை செய்யும் காலம் வரைக்கும் அதற்கான செலவு எவ்வளவு, அதனால் எமக்கு கிடைக்கும் இலாபம் எவ்வளவு என்று நாம் முன்கூட்டி தெரிந்து கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ்விடயத்தில் நாம் உண்மையாக இது இலாபம் ஈட்ட வேண்டும் என்பதற்கு அப்பால் இப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க வேண்டும். அதற்காக நட்டம் அடைவதற்கு அல்ல. அவர்கள்

நிலத்தை பார்த்துவிட்டு சொன்னார்கள் கச்சான் செய்ய இயலாது கௌபியை விதைக்கலாம் என்று, கௌபிக்கு பராமரிப்பு செலவு மிகக் குறைவு. நிச்சயமாக ஒரு Estimate தயார் செய்து அதற்குரிய செலவுகள் எல்லாம் இச் சபையினால்தான் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நஸீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது எமது முதற்கட்டம் ஆகும். அவ்வாறாக இலாப நோக்கு இல்லாமல் செய்வதாக இருந்தால் என்னுடைய கருத்து 10 ஏக்கரை விட குறிப்பிட்ட நிலத்தில் முதற்கட்டமாக எதிர்வருகின்ற பெரும்போக கால எல்லைக்குள் பயிர்ச்செய்கை செய்து அதனுடைய ஒத்திகையை பார்த்துவிட்டு அதன் பின் முடியுமானவரை இச் சபையினால் அதற்கான நிதியை ஒதுக்கி எமது ஊரிலே வறுமை கோட்டுக்கு கீழ் வாழுகின்ற சிலருக்கு நாம் அதிலே வேலை வாய்ப்புக்களை கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சம்மாந்துறை வைத்தியசாலை 2007 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது Grade A என்று, ஆனால் அது இதுவரைக்கும் Grade B இலே இருக்கின்றது. ஏனென்றால் எமக்கு அண்மையில் இருக்கும் நிந்தவூர் வைத்தியசாலையை Grade A ஆக தரம் உயர்த்துவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் நாம் மிகவும் எமது ஊர்பற்று எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து Grade A என்ற நிலைக்கு எமது வைத்தியசாலையை கொண்டு வருவதற்கு எமது உறுப்பினர்கள் அனைவரினது சார்பாகவும் எமது கௌரவ தவிசாளர் அவர்கள் கவனம் செலுத்தி Grade A ஆக மாற்றினால் நல்லது என்று நினைக்கின்றேன். ஏனென்றால் இது Grade A ஆக மாற்றப்படாத காரணத்தினால்தான் எல்லோரிடமும் வைத்திய அத்தியட்சகர் சில விடயங்களை கையேந்த வேண்டி இருக்கின்றது. Provincial க்கு ஒரு கடிதம் எழுதி 03 வருடத்திற்கு பிறகுதான் பதில் கிடைக்கின்றது. அப்படியான வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலையை பின்தங்க வைக்கின்றார்கள். இதனை Grade A ஆக மாற்றக்கூடாது என்று சில அரசியல் உள்வாங்கலும் தலையிடுகின்றது. எனவே நீங்கள் தயவு செய்து மும்முரமாக நாங்கள் கேட்கும் சில விடயங்களை கொடுத்து உதவி எமது வைத்தியசாலையை Grade A இற்கு மாற்ற வேண்டும் என்பதுதான் எனது கருத்தே தவிர எனக்காக இதை கொடுத்து உதவ வேண்டும் என்றோ, தவிசாளருக்காக கொடுத்து உதவ வேண்டும் என்றோ நான் கேட்டுக் கொள்ளவில்லை. மக்களுக்காக கேட்கின்றேன் எனவே தயவு செய்து இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**தீர்மானம் - 04/27/17**

சம்மாந்துறை வைத்தியசாலை Grade A ஆக தரம் உயர்த்தப்பட்டும் அதற்குரிய ஆளணி நிறைவேற்றப்படாததனால் இதை நிவர்த்தி செய்யுமாறு மாகாண ஆளுனருக்கு வேண்டுகோள் விடுப்பதற்கான பிரேரணை

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இப்தார் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

*2020.05.12 Sammanthurai Pradeshiya Sabha -04/27*

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

*2020.05.12 Sammanthurai Pradeshiya Sabha -04/27*

***2020.05.12 Sammanthurai Pradeshiya Sabha -04/27***